உ

கடவுள் துணை.

# அருணாசலேசுரர்பதிகம்.

## உண்ணாமுலையம்மன்பதிகம்.



B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை.

1923.

21

சிவமயம்.

திருவண்ணமலை

# அருணாசலேசுரர்பதிகம்.

காப்பு-வெண்பா.

கண்ணனும்வண்ணக் கமலனுங்காண்டற்கரிய
அண்ணமலையாரடிமீதி லொண்ணர்
துதியுரைக்கநாளுந் துணையாயன்பர்க்குக்
கதியளிக்குந்தும்பிமுகன் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

நினைவாகிமூல நிலையாகிநேச நிஜரூபமானவடிவே, பனமாய்கைமூடி யறிவேகலங்கி மனமுந்தியங்கிவெகுவாய், இனமோடிருந்து அவதீமிலைந்து எமதூதரோடிவருமுன், மனவேகமாக அருணசலேசர் வரவேண்டுமென்றனருகே. 1

கயிலாயமேரு யதிலாறுவீடு கரைகண்டதில்லையொருவர், வெயிலானஜோதி விளையாடும்வீதி வெளிமாய்கையேதுமறியேன், பயிலானகொம்பின் பகர்காயுமாகி பழமாயுதிர்ந்துவிழுமுன், மயிலாடுசோலைஅருணசலேசர் வரவேண்டுமென்றனருகே. 2

நதியோடுதும்பை முடிமீதணிந்து நலமானவெள்ளைவிடைமேல், பதியாயிருந்து வுமைபாதிகொண்ட பரனேயுங் நாமமறவேன்; விதியாதனேவ வெமதூதர்வந்து வெகுவாதைசெய்துவிடுமுன், மதியேபுனைந்த அருணாசலேசர் வரவேண்டு மென்றனருகே. 3

உற்றாருமில்லை யுறவில்லையாரு முறைசொல்லியொப்பிவரவே, பெற்றாருமில்லை மறைதேடுகின்ற பிரானேயுந்நாமமறவேன்; கற்றாருமேற்ற வடியாரருந்து கனியாயமர்ந்தகனியே; மற்றாருமில்லை அருணாசேலசர் வரவேண்டுமென்றனருகே. 4

கொங்கைக்குரும்பை முலைமாதராசைகொடிதான மோகமதனாற், சங்கற்பமொன்று மறியாமல்வீணில் தடுமாறியாகிவிடுமுன், திங்கட்கொழுந்து முடிமீதணிந்த சிவனேயுந்நாமமறவேன், மங்கைக்கிரங்கும் அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. 5

உருவானகாய மதிலாறுவீடு உதிரங்கலந்தவுடலுங், கருவாகிநின்று புவிமீதில்வந்து கபடேதுமொன்றுமறியேன், குருவாகிநின்ற சிவஞானஜோதி குருவேநின்னாமமறவேன், மருவீசுசோலை அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே 6

பணியாதகோயி லணியாதநீறு பசியாதசோறுத
ருவாய், தணியானவாசி சிவஞானமோன சுகமேயெ
னக்கருள்செயாய், தணியாதகோபமுடலோடிருந்து
சலியாதமாய்கைவெளியே, மணியாடுநாதர் அருணா
சலேசர் வரவேண்டுமென்றனருகே. 7

சூதாடிநின்ற சிவசூத்திரங்கள் சுழுனவாயமர்ந்த சு
ழியே, பாதாதிகேச முடலோடிருந்து படுகாளிலாடு
நடனம், வேதாவுமாட மதியாடமூவர் விளையாடிநின்
றவெளியே, வாதாடிநின்ற அருணாசலேசர் வரவே
ண்டுமென்றனருகே. 8

அடிமூலவட்ட மதிலாறுதிட்ட மதிமேலிருந்தபர
னே, துடியானசத்தி சிவரூபவல்லி சுகமானவேதவ
டிவே, அடியாருளத்தில் தெளிவாய்விளங்கு மானே
நின்னைமறவேன், வடிவானஜோதி அருணாசலேசர்
வரவேண்டுமென்றனருகே. 9

கல்லாலிநீழ லினிநால்வர்முன்பு சாணுதயோக
நிலையைச், சொல்லாதுசொன்ன மெய்ஞ்ஞானமூர்த்
தி சுடராயிலங்குமரசே, வல்லாளமன்ன னருமைந்
தனுகி வருஞானமானவடிவே, வல்லானுகந்த அரு
ணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. 10

உரைதங்கிநின்ற வுயிரெங்குமாகி யுலகெங்குமேக வடிவாய், கரைகண்டதில்லை வெகுகோடிகாலை கலிகாலமாய்கையதனுல், இரைதேடியாசை பசியால் மெலிந்து இறுகண்டியங்கிவிழுமுன், வரைதங்கிநின்ற அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. 11

கட்டளைக் கலித்துறை.

கண்மணியேபைங்கரக்களிற்றைதறுகுகாதலியாம்
பெண்மணியேபுறக்காடுறைபேய்மணியேபிறக்குந்
திண்மணியேயன்பர்டீவினைபோக்குந்திருமணியே
விண்மணியேதிருவண்ணாமலைதிகழ்வேதியனே.

அருணாசலேசுரர்பதிகம் முற்றிற்று.

---

அம்பாள் துணை.

திருவண்ணாமலை

## உண்ணாமுலையம்மன்பதிகம்.

---

காப்பு வெண்பா.

ஓங்குபெரும்பாறுதவுமுண்ணாமுலையவண்மேற்
பாங்குபெறுஞ்செந்தமிழிற்பாவுரைக்க-நீங்கரிய
வெந்துயரெலாம்போக்கும்வேழமுகன்செய்யதிருக்
கந்தமலர்ச்செஞ்சரணங்காப்பு.

## ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டவாழி மிசைபள்ளிகொண்ட திரு மாலுமுண்டகமிடை, யூர்கொண்டநான்கு முகனும் பரந்து வுடைகொண்ட சிந்தையொடுதே, பேர்கொண்டவன்னி மலைநாதர்நாம மிழைகொண்ட மின்ன லிடையாய், வார்கொண்டவுண்ணு முலைநாமதேவி வரவேண்டு மென்றனருகே. 1

நறவாடறும்பு வனசம்பிறங்கு நனிவாவிசூழுமிள வெண், பிறைநீடுசெஞ்சாடவிகண்டறு பெறுகுஞ் சிறந்தவெழிலார் நிறையோடுநின்ற கிரியும்விளங்கநி லைவாமவாலைநெடுநாண், மறைதேடுமுண்ணு முலைநா மதேவி வரவேண்டுமென்றனருகே. 2

கலையாய்மிலைந்தவிரிநீறுடுத்த கவினுர்புவிப்பெண வளொண், டலையாய்விளங்கிபணவாதிசேட சயனஞ் சிரங்கணெளிறுஞ், சிலையாய் சிவந்ததனி ஞானதீப சிகை கொண்டளாவுநெடிய, மலைமேவுமுண்ணு முலைநாமதேவி வரவேண்டு மென்றனருகே. 3

பொன்னிற்பறந்த புவியிற்பொறுந்துபுளகுற்றமா தர்மயலிற், சென்னிக்கண்வைத்து மருள்வேனை பொய்யில் திரிவேனைசற்றுமிளகாக், கொன்னைச்சோ லேனை கொடுமைக்குளேனை குறைதீரவுன்கணமுளான், மன்னிக்குமுண்ணு முலைநாமதேவி வரவே ண்டுமென்றனருகே. 4

எந்தாய்விணின்க ணிமையோர்பரவு மிமயந்தரும்
பெணுமையென், சிந்தாகுலங்க ளடியோடகளந்துசி
தறும்படிச்செய்சிறுவன், பந்தானறுப்பி யடியேனு
ளத்தை பறுகும்பசங்கிளியென்முன், வந்தாள்கவு
ண்ணு முலைநாமதேவி வரவேண்டுமென்றனருகே. 5

சற்றுகினும்மு ளுடையாவுலுத்தர் சமுகத்திலேகி
கவிபா, டித்தாழ்வுரும லினையும்புயங்களெனுநின்ச
ரண்கணெளியேன், விந்தாரமானதமிழ்பாடிஞானவி
றல்மேவவைத்திடுபோல், வற்றுதவுண்ணு முலைநாம
தேவிவரவேண்டு மென்றனருகே. 6

அயனுவினுங்கணரிமார்பினுஞ்செவரனுர்மறுங்கு
முடலி, னயனுரவிந்தமொருவாயிரங்கணகுமிந்திரன்
றனுழியும், உயுமண்பிலங்கோ ளுயிர்தோறுநிற்றனு
ருதேசசன்றியுளவோ, மயமாதுவுண்ணு முலைநாம
தேவி வரவேண்டுமென்றனருகே. 7

கறுவீடுதேகமதிலாறுமான கடைவீடு முச்சிநடு
விற், பெறுவீடுகொட்சிமணல்வீடுகெட் புசியேநடுக்கவ
சமோ, எரிவீடெனச்சொல்இடுகாடுபோமுனெளியே
ன்முனேகிவருவாய், மறுவீடுமுண்ணு முலைநாம
தேவி வரவேண்டுமென்றனருகே. 8

அரவுண்ட நஞ்சமதுதீரவென்பு மறுமங்கையாகி
வரவும், பெறுநீரிலோலையெதிரேறமாறன்பிணிரான
வெப்பகலவும், திருவார்ந்தஞானவமுதங்கரந்து சீர்
காழியற்குதவவே, வறுசெல்வியுண்ணு முலைநாமதே
விவரவேண்டுமென்றனருகே. 9

கழியூடெழுந்தவழல்சோதிநீடு துறைகண்டுவுன்னு
மறிவை, யிழைவாடுகின்றவெனையாரெனச்சொ லிடு
வேனெனைவக்குமுறவாம், ஒழிவாடுமோனதனிஞானி
யான வுமையேதிணிலமிடறேன், வழிபாடுமுண்ணு
முலைநாமதேவி வரவேண்டுமென்றனருகே. 10

அதிகத்துயர்க்குள் பதையெற்குணுமஇசனத்தை
யன்றியிலையிப், பதிகத்தைநிற்சரணபங்கயத்தில் பரி
வுற்றுரைக்கமெனையாள், ததியெத்ததிற்சொல் ததி
யைத்தறு முத்தமியேபரைப்பெணுமையே, மதிசத்
தியுண்ணுமுலைநாமதேவிவரவேண்டுமென்றனருகே.

கட்டளைக்கலித்துறை.

நாயகியேபொற்கணங்குடறைபைத்தலைநச்செயிற்று
வாயதிமேற்றுயிலவோன்றுஞ்சோதரியேமலர்க்கண்
டீயகமா நுதலாம்பிறையாய்நின்றன்சேவடியில்
சேயதத்தேவைத்திடுதியுண்ணுமுலைச்சிற்பரியே.

உண்ணுமுலையம்மன்பதிகம்
முற்றிற்று.

---